Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 19

## சங்க இலக்கியங்கள் காட்டும் அறச்சிந்தனைகள்

**முனைவர் கி. சாந்தினி**
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜி.டி.என்.கலைக்கல்லூரி, திண்டுக்கல்.

### *முன்னுரை*

பண்டைத் தமிழ் மக்களின் வாழ்வியலைப்பாடு பொருளாகக் கொண்டு உருவாக்கப் பட்டவைகளே சங்க இலக்கியங்கள். சமுதாயம் ஒப்புக் கொண்ட பழக்க வழக்கங்களையும் நடைமுறை நெறிமுறைகளையும் மக்கள் வாழ்விற்கு உகந்தவை என்ற நிலையில் நம் முன்னாகள் அவற்றை அறங்களாக வரையறை செய்துள்ளனர். வழிப்போக்கர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அருமையான பாதையைப் போல, வாழ்க்கைப் பயணம் தங்குதடையின்றி செல்ல நம் சான்றோர்கள் காட்டிய நெறிமுறையே அறம் எனப்பட்டது. அறம் என்ற இச்சொல்லின் தொன்மையை,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்"

என்ற தொல்காப்பிய அடிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். நம் சங்க இலக்கியங்கள், மனித வாழ்வின் உயர்விற்குப் பயன்படும் உயரிய அறக் கருத்துக்களை எவ்வாறு எடுத்துரைக்கின்றன என்பதை எடுத்துரைப்பதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

## வாய்மை

பொய் பேசாதிருப்பதே வாய்மையாகும். அதாவது உண்மையை மட்டுமே பேச வேண்டும். இக்கருத்தை நம் சங்க இலக்கியங்கள் அதிக இடங்களில் எடுத்துரைப்பதைக் காணலாம். ஐயன் திருவள்ளுவர்,

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" 1
என வாய்மைக்கு விளக்கம் தருகிறார்.
குறுந்தொகை, வாய்மைக்குப் பெயர்போன நாலூர்க் கோசர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது,

"நாலூர்க் கோசர் நன்மொழி போல வாயா கின்றே" என்றும்,

## "ஒன்று மொழிக் கோசர் போல" 3

என்றும் வாய்மையில் சிறந்துள்ள அவனது பண்பைப் பாராட்டுவதன் மூலம், தலைமகனுக்குரிய பண்புகளில் பொய் பேசாமை என்ற வாய்மையே தலையான தகுதியாகக் கருதப்பட்டதை உணரலாம். மேலும்,

## "அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை " 4

என்ற குறுந்தொகை அடிகள் மூலம் அக்காலத்தில் பொய் பேசாமையே சான்றோருக்கு உரிய இலக்கணமாகக் கருதப்பட்டதையும் அறிகிறோம்.

## விரும்தோம்பல்

பழந்தமிழரின் நாகரிகப், பண்பாட்டுக் கூறுகளில் விருந்தினரைப் பேணுதல் சிறப்பிடம் பெறுகிறது. விருந்தினர் என்பதற்கு முன்பின் தெரியாதவர், புதியவர் என்பது பொருளாகும். குடும்பத்தைப் பேணுவது சிறப்பு. அதைவிட முன்பின் தெரியாதவரை உபசரித்தல் தான் உயர்ந்தது எனப் பண்டைத் தமிழர் மதித்தனர்.

"இருந்தோம்பி இவ்வாழ்வது எல்லாம் விருத்தோம்பி"

## வேளாண்மை செய்தல் பொருட்டு" 5

என்ற குறட்பா இக்கருத்தை ஆதரித்துப் பேசுகிறது.

இரவில் வாயிற் கதவினைத் தாளிடுவதற்கு முன்பு, வீட்டுத் திண்ணையில் யாராவது விருந்தினர் அமர்ந்துள்ளாரா என்பதைப் பார்த்து, அவர்களை உண்பிக்கும் பொருட்டு உள்ளே வரவேற்று உபசரிப்பதை,

" புள்ளும் மாவும் புலம்போடு வதிய
நல்லென வந்த நான் மாலைப்
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ எனவும்" 6

என்ற பாடலடிகள் வழிப்போக்கர்களையும் அனாதைகளையும் விருந்தோம்பிய தன்மை வியப்பிற்கு உரியதாகும்.

## ஈகை

இல்லாதவர்களுக்கு வழங்குவதையே ஈகையென்று நம் முன்னோர் கருதினர். தன்னலம் கருதாது பிறர் நலம் கருதும் பெரியோர்கள் சங்கப் பாடல்களில் புகழ்ந்துரைக்கப்படுகின்றனர். அதியமானைப் பாராட்டும் புறநானூற்றுப் பாடல் ஒன்று கேட்கின்ற நம் இதயத்தை நெகிழ்விக்கிறது.

" உண்டாயாயின் பதம் கொடுத்து
இல்லாயாயின் உடன் உண்ணும்
இல்லோ ஒக்கல் தலைவன்" 7

என்ற இப்பாடல் தன்னிடம் ஒன்றுமே இல்லாத வறிய நிலையிலும் தன்னை நாடிவரும் ஒருவனிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்குகிறது.

புலவர் பெருஞ்சித்திரனார், குமணவள்ளல் தமக்களித்த பரிசினைத் தன் மனைவியின் கையில் கொடுத்து,

"நின்நயத்து உறை நர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்
பல்மான் கற்பின் நின்கிளை முதலோக்கும்
கடும்பின் கடும்பசி நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கும் என்னாது என்னொடும் சூழாது
வல்வாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே" 8

என்று கூறுகிறரர். நீயும் கொடு என்பதன் மூலம், நானும் கொடுப்பேன். நீயும் கொடுக்க வேண்டும் எனக் கூறுவதைக் காண்கிறோம். வறுமையில் உள்ள புலவர் தன்னிடமுள்ள செல்வத்தை வைத்துத் தான் மட்டும் பல்லாண்டு காலம் சுகமாக வாழ விரும்பவில்லை. மாறாக, முன்பு தமக்கு உதவியவர்கள், உதவாதவர்கள் என்றெல்லாம் பாராமல், யாரெல்லாம் வறுமையில் வாடுகிறார்களோ, யாருக்கெல்லாம் இச் செல்வம் தேவைப்படுகிறதோ

அவர்களுக்கெல்லாம் கொடுத்து உதவ வேண்டுமென நினைக்கின்ற அறச் சிந்தனை அங்கே புலப்படுகிறது.

”நெடிய மொழிதலும் கூடிய ஊர்தலும்
செல்வம் அன்று ! தன்செய்வினைப் பயனே !
சான்றோர் வெல்வம் என்பது சோர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்

## மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே” 9

என்று வரும் நற்றிணைப் பாடலும் ஈகையின் சிறப்பை எடுத்தோதுகிறது.

## முடிவுரை

இளவயது கல்விப் பருவத்தில் குழந்தைகளுக்கு எளிமையான பாடல்கள் மூலம் நற்சிந்தனைகளைப் புகட்டுவது போல, வாய்ப்பு நேரும் போதெல்லாம் நமது சங்க இலக்கியங்கள் அறக் கருத்துகளை எடுத்துரைக்கத் தவறுவதேயில்லை.

”ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தார்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாமை
செறிவு எனப்படுவது கூறியது மறாமை
அறிவு எனப்படுவது பேதையமர்சொல் நோற்றல்
நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ணோடாது உயிர்வெளவல்

## பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்” 10

என்ற கலிப்பாடல் மனிதர்கள் நடைமுறைகளை எடுத்துக் கூறுகிறது. அதாவது, வறுமை உற்றோருக்கு உதவுவதையே இல்லறம் என்று சொல்ல வேண்டும். தம்மோடு இணைந்த ஒருவரைப் பிரியாமல் இருக்கின்ற நடைமுறையே போற்றுதல் என்பதாகும். உலக நடைமுறையை நன்கு அறிந்து நடந்து கொள்வதையே மக்கட்பண்பு என்று சொல்ல வேண்டும். உற்றார் உறவினரை வெறுத்து ஒதுக்காத இயல்பையே அன்பு என்று சொல்ல வேண்டும். அறிவுத் தெளிவு இல்லாதவர்கள் அந்தத் தெளிவின்மை காரணமாக நம்மீது கூறும் கடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்ளும் தன்மையே அறிவு என்று சொல்ல வேண்டும். ஒருவருக்குக் கொடுத்த வாக்கை மீறாமல் இருக்கின்ற பெரிய குணத்தையையே உறவு என்று சொல்ல வேண்டும். ஒருவர் பேணிப் பாதுகாப்பதற்காகக் கொடுத்த செய்தியை வெளிப்படுத்தாமல் இருக்கின்ற

திறமையே நிறை என்று சொல்ல வேண்டும். கண்ணோட்டம் காரணமாக நிலை தடுமாறாமல் நீதி வழங்குவதையே முறை செய்தல் என்று சொல்ல வேண்டும். அழிக்கப்பட வேண்டியவர்களை, அவர்களை அழிப்பதற்குரிய சரியான தருணம் வரும்வரை பொறுத்துக் கொள்வதையே பொறுமை என்று சொல்ல வேண்டும். என அறச் சிந்தனைகளைப் பட்டியலிடுவதை அறிகிறோம். கடல் போல் விரிந்துள்ள சங்க இலக்கியங்கள் காட்டும் அறச்சிந்தனைகளில் சிறு துளியை இவ்வாய்வு வெளிக்காட்டியுள்ளது.

## அடிக்குறிப்புகள்

1.திருக்குறள் 297
2.குறுந்தொகை 15
3. குறுந்தொகை 73
4. குறுந்தொகை 184
5. திருக்குறள் 81
6. குறுந்தொகை 118
7.புறநானூறு 95
8.புறநானூறு 163
9. கலித்தொகை 133

## துணைநூற் பட்டியல்


1. கந்தசாமி சோ.த, தமிழிலக்கியச் செல்வம் தொகுதி - 2, டிசம்பர் 2003, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை
2. மாதையன் பெ, தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள், ஜீலை 2011, நியூ செஞ்சரி புத்தக நிலையம், சென்னை.
3. சாலினி இளந்திரையன், சங்கத் தமிழரின் மனிதநேய மணி நெறிகள், 2004, உலகத் தமிழாரய்சி நிறுவனம், சென்னை
4. மாதையன், சங்க இலக்கித்தில் குடும்பம், ஜீன் 2010, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.